**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG10 – நிலை I – (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**மே – சூன் 2019**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. இறைவன் எப்படிப்பட்டவன்?
2. தமிழர்க்குத் தாய்மொழி எது?
3. தீயவர் நட்பு எதைப் போன்றது?
4. எத்தகைய நூல்களைக் கற்க வேண்டும்?
5. வற்றல் – என்ன ஆகுபெயர்?
6. சர். சி.வி. இராமன் கண்டுபிடிப்பின் பெயர் என்ன?
7. சார்பெழுத்துகள் மொத்தம் எத்தனை?
8. சைவர்கள் பின்பற்றும் சமயம் எது?
9. கணிப்பொறியில் உள்ளீடாகக் கொடுக்கப் பெறுவது எது?
10. பெயரெச்சம் என்றால் என்ன?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. 'வாழ்க வாழ்க' என்ற பாடல் உணர்த்தும் கருத்து யாது?
2. மழையின் இயல்பு யாது?
3. வினைச்சொல் என்றால் என்ன? அதன் வகையை எழுதுக.
4. பண்பாகு பெயரை விளக்குக.
5. பதினாறு கால் மண்டபத்தைக் காப்பாற்றியவர்கள் யாவர்?
6. காஞ்சிபுரத்தில் உள்ள இரண்டு சிறப்புகளை எழுதுக.
7. குற்றியலிகரம் என்றால் என்ன?
8. வாழைக்குலை என்றால் என்ன?
9. எந்தெந்த அடிப்படையில் தமிழ்ப் பழமையான சிறந்த மொழி எனலாம்?
10. மனிதன் எவற்றில் வானளவு உயர வேண்டும்?
11. சோழன் கிள்ளியின் களிறு எங்கே கால் வைத்தது?
12. நஞ்சு உண்ட நாயக மூர்த்தி வீட்டில் யார் யார் இருந்தார்கள்?

13. முடியரசனார் தமிழை எவ்வாறு மதிக்கிறார்?
14. செயபாலன் எவற்றைக் கவிதையில் வடித்தார்?
15. உவமை அணி என்றால் என்ன?

## பகுதி – இ

**III. எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. நாமக்கல் கவிஞரின் நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
2. யாப்பு என்றால் என்ன? விளக்குக.
3. "விருந்தினரை வரவேற்பதில் தமிழ்மக்கள் சிறப்பு உடையவர்கள்." – விளக்குக.
4. ஒரு நாடு உயர்வதற்குப் பாரதியார் கூறும் கருத்துகள் யாவை?
5. எவற்றை அபிராமியின் கடைக்கண்கள் தரும் என்று அபிராமி பட்டர் கூறுகிறார்?
6. தமிழ் உலகச் செம்மொழிகளுள் ஒன்று – விளக்குக.
7. வாழைப்பழம் – வாழைப்பழங்களின் வகை பற்றி விளக்குக.
8. நாடகம் குறிப்பு வரைக.

## பகுதி – ஈ

**IV. ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. உலகைக் காக்கும் படைப்பாளன் "அல்லா" – என்பது பற்றி திருக்குரான் நூல் வழி உமறுப்புலவர் கூறும் செய்தியினைத் தொகுத்து எழுதுக?
2. சர்.சி.வி. இராமனின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்க.
3. பெயர்ச்சொல் என்றால் என்ன? அதன் வகைகளை எழுதி விளக்குக.

## பகுதி – உ

**V. ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. குடும்ப விளக்கில் உள்ள செய்தியினைக் கட்டுரை வடிவில் எழுதுக.
2. காஞ்சிபுரம் கோயில்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.